விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும்

அபிவிருத்தி நிலையம் (NERDC)

# வெற்றிடங்கள்

NERDC ஆனது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் நோக்கெல்லையின் கீழுள்ள, இலங்கையில் உள்ள பிரதான பொறியியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனமாகும். நாடு முழுவதும் தொழில்துறைகளுக்காக தொழில்நுட்ப சேவைகளை மேற்கொள்வது மற்றும் தேசிய முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் NERDC பல்வேறு அறிவுசார் சவாலான பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.

பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த, துடிப்பான, முற்போக்கான மற்றும் புத்தாக்கமுடைய இலங்கையர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிப்பாளர் நாயகம் - HM 2-3**

**வெளிவாரி அபேட்சகர்கள்**

**கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகள் (கீழுள்ள 1 அல்லது 2)**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து 1ஆவது வகுப்பு அல்லது 2ஆவது வகுப்பு மேல் நிலையுடன் 4 ஆண்டு காலத்தின் பொறியியலில் இளமாணி பட்டம் மற்றும் இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றின் கூட்டு அங்கத்துவம் (பட்டயம்) அல்லது முதுமாணி தரத்தில் பட்டப்பின்படிப்புப் பட்டம்

**அல்லது**

02. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொறியியலில் 4 ஆண்டுகள் இளமாணி பட்டம் மற்றும் இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றின் கூட்டு அங்கத்துவம் (பட்டயம்)

அனுபவம்: புகழ்பெற்ற அமைப்பு ஒன்றில் முதல் பட்டத்தின் பின்னர் 20 ஆண்டுகள் அனுபவம் அதில் 10 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும் என்பதோடு ஐந்து ஆண்டுகள் பட்டய பின் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை: 30 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(அரச கூட்டுத்தாபனங்கள்/ சபைகள்/ மற்ற சட்ட ரீதியான சபைகள் உட்பட அரச துறையில் தற்போதுள்ள ஊழியர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**உள்ளக அபேட்சகர்கள்**

மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

NERDC இல் பிரதி பணிப்பாளர் நாயகம் ஒருவராக ஐந்து (05) ஆண்டுகள் அனுபவம்.

**சம்பள அளவு:** HM 2-3 - 2025 : ரூபா 173,000 - 12x4,850 - 231,200

(01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின்படி சம்பளம் வழங்கப்படும் + தொழில்முறை கொடுப்பனவு, தொடர்பாடல் கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு முதலியவை உட்பட அரசு அங்கீகரித்தல் அனைத்து கொடுப்பனவுகள்)

**மற்ற நன்மைகள்:**

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு NERDC சம்பளத்தின் 15% பங்களிப்புச் செய்யும் என்பதோடு ஊழியர் 10% பங்களிப்புச் செய்வார்
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு NERDC சம்பளத்தின் 3% பங்களிப்புச் செய்யும்.
- அரசு அங்கீகரித்த போக்குவரத்து கொடுப்பனவு ரூபா 50,000 அல்லது NERDC வைத்துள்ள வாகனம், குறித்த அரச சுற்றுநிருபங்களின்படி எரிபொருள் கொடுப்பனவு.
- NERDC இன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ திட்டத்தின்படி மருந்து விலைப்பட்டியல்களை பணமாக்கல்.
- மற்ற அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்/ தொடர்புடைய அரச சுற்றுநிருபங்களின்படி முன்னுரிமை அளிக்கப்படும்.

**விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி:** 2025.10.12

இரண்டு உறவினர்கள் அல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் மற்றும் கல்வி, தொழில்முறை மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் நகல்களுடன் முழுமையான சுயவிபரக் கோவையை கொண்ட விண்ணப்பங்களை இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி நிலையை குறிப்பிடுதல் வேண்டும். அரச துறை, அரச கூட்டுத்தாபனங்கள்/ சபைகள்/ சட்ட ரீதியான அமைப்புகளின் ஊழியர்களின் விண்ணப்பங்களானது, அவ்வாறான விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படுவதற்கு குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்)

**தலைவர்**
**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு**
**3ஆவது மாடி,**
**செத்சிறிபாய, கட்டம் I,**
**பத்தரமுல்லை**

**தொ.: 011-2 879 410, 011- 2 879 404**
**இணையதளம்:** ***www.most.gov.lk***